# ரெடிங்டன்


ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்

பதிவு அலுவலகம் : எஸ்.பி.எல். கிண்டி ஹவுஸ்

95, மவுண்ட்ரோடு, கிண்டி, சென்னை-600 032

CIN: L52599TN1961PLC028758

தொலைபேசி எண் : 044-42243353

தொலைநகல் எண் : 044-22253799

மின்னஞ்சல்: investors@redington.co.in

இணையதளம் : www.redingtonindia.com


## உறுப்பினர்களுக்கு அஞ்சல் வாக்குப்பதிவு தொடர்பான அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 110 மற்றும் பொருந்தத்தக்க இதர பிரிவுகள் ஏதேனும் இருப்பின் அவற்றின்படியும், நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 மற்றும் அதுபோன்ற இதர பொருந்தத்தக்க சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளின்படியும், இதன்மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், கீழ்க்காணும் அலுவல்களுக்காக, மின்னணு வாக்குப்பதிவு உட்பட அஞ்சல் வாக்குப்பதிவு மூலம் பங்குதாரர்களின் ஒப்புதல் கோரப்படுகிறது:

1. ரெடிங்டன் பங்கு மதிப்புயர்வு உரிமை திட்டம் 2017-க்கும், நிறுவனத்தின் தகுதிவாய்ந்த ஊழியர்களுக்கு பங்கு மதிப்புயர்வு உரிமை வெளியீடு செய்வதற்குமான ஒப்புதல் பெறுவதற்குரிய சிறப்பு தீர்மானம்

2. ரெடிங்டன் பங்கு மதிப்புயர்வு உரிமை திட்டம் 2017-க்கும், ரெடிங்டனின் துணை நிறுவனங்களின் தகுதிவாய்ந்த ஊழியர்களுக்கு பங்கு மதிப்புயர்வு உரிமை வெளியீடு செய்வதற்குமான ஒப்புதல் பெறுவதற்குரிய சிறப்பு தீர்மானம்

3. ஹேரோ இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங் லிமிடெட்-ஐ நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர் அந்தஸ்தில் வகை நீக்கம்/மறுவகைப்படுத்தல் செய்வதற்குரிய இயல்பான தீர்மானம்

அஞ்சல் வாக்கெடுப்பு அறிவிப்பு மற்றும் அஞ்சல் வாக்குச்சீட்டு அனுப்புதல், அக்டோபர் 06, 2017 அன்றுள்ளபடி உறுப்பினர்கள் ஆவணத்தில் பெயர் இடம்பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அக்டோபர் 20, 2017 அன்று நிறைவு செய்யப்பட்டது. அஞ்சல் வாக்கெடுப்பு அறிவிப்பு மற்றும் அஞ்சல் வாக்குச்சீட்டு, 1) வைப்புதாரர் பங்கேற்பாளர்களிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் வாயிலாகவும், 2) வைப்புதாரர் பங்கேற்பாளர்களிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்திராத உறுப்பினர்களுக்கு முன்கூட்டிய அஞ்சல்தலை கட்டணம் செலுத்தப்பட்ட, சுயமுகவரி பொறிக்கப்பட்ட வணிக பதிலுறை இணைத்து அஞ்சல் வாயிலாகவும், அனுப்பப்பட்டுள்ளன.

அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு வாக்குப்பதிவு செய்யும் வசதியை வழங்க ஏதுவாக, சென்ட்ரல் டிபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடட் (CDSL)-ன் சேவைகள் பெறப்பட்டுள்ளன. அஞ்சல் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு ஆகிய இரண்டும், அக்டோபர் 21, 2017 சனிக்கிழமை (காலை 9.00மணி)-க்கு தொடங்கி நவம்பர் 19, 2017 ஞாயிற்றுக்கிழமை (மாலை 5.00 மணி)-க்கு முடிவடையும் என்பதை உறுப்பினர்கள் நினைவு கூரவும். நவம்பர் 19, 2017-ஆம் தேதிக்குள் அஞ்சல் வாக்குச்சீட்டுகள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்டு ஆராய்வாளரை வந்தடைய வேண்டும் என்பதையும், நவம்பர் 19, 2017 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 5.00 மணிக்குப் பிறகு வந்துசேரும் அஞ்சல் வாக்குச்சீட்டுகள் செல்லாததாக கருதப்படும் என்பதையும் உறுப்பினர்கள் தயவு செய்து கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அஞ்சல் மற்றும் மின்னணு வாக்குப்பதிவுகளை நேர்மையான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக, நிறுவன செயலர் சேவையில் ஈடுபட்டுள்ள திருமதி ஆர். புவனா அவர்கள் வாரியத்தால் ஆராய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அக்டோபர் 6, 2017 (தகுதிகாண் நாள்) அன்றுள்ளபடி உறுப்பினர்கள் ஆவணத்தில் / பயனீட்டாளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ள தகுதி படைத்தவர்கள் ஆவர். தகுதிகாண் நாளன்று உறுப்பினரல்லாதவர்கள் இந்த அறிவிப்பை தகவலுக்காக மட்டும் பயன்படுத்திக்கொள்ளவும்.

உறுப்பினர்கள் யாருக்கேனும் அஞ்சல் வாக்குச்சீட்டு கிடைக்கவில்லையெனில், அவர்கள் investors@redington.co.in என்ற மின்னஞ்சலை தொடர்பு கொண்டு அதனை பெறலாம் , அல்லது நிறுவனத்தின் www.redingtonindia.com என்ற வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து பெறலாம். அல்லது நிறுவனத்தின் பதிவாளர் & பங்கு மாற்று முகவர் M/s. கேமியோ கார்பொரேட் சர்வீசஸ் லிட், சுப்ரமணியன் பில்டிங், 5-வது மாடி, எண் 1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை-600002, அவர்களிடம் விண்ணப்பித்து வாக்குச்சீட்டு பிரதியை பெறலாம்.

அஞ்சல் வாக்கெடுப்பு முடிவுகள் நிறுவனத்தின் தலைவர் / தலைவரால் உரிமையளிக்கப்படும் இயக்குநரால் நவம்பர் 20, 2017 திங்கள் கிழமையன்று மாலை 5.00 மணிக்கு, எஸ் பி எல் கிண்டி ஹவுஸ், 95, மவுண்ட் ரோட், கிண்டி, சென்னை-600032 என்ற முகவரியில் அமைந்துள்ள நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் வெளியிடப்படும். முடிவுகள் நிறுவன வலைத்தளமான www.redingtonindia.com -லும் வெளியிடப்படும்.

அஞ்சல் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான ஏதேனும் விளக்கங்கள்/குறைகள் இருப்பின், உறுப்பினர்கள், திரு. பிரியா, நிறுவன செயலாளர், கேமியோ கார்பொரேட் சர்வீசஸ் லிட், சுப்ரமணியன் பில்டிங், 5-வது மாடி, எண் 1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை - 600002, தொலைபேசி எண் 044-28460718, மின்னஞ்சல் priya@cameoindia.com அல்லது திரு.வாசுதேவன், மண்டல தலைவர்-தமிழ்நாடு, மொபைல் 9381995000 ஆகியோரை அணுகவும்.

**இயக்குநர் குழும ஆணைப்படி,**
**ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்**
**M.முத்துக்குமாரசாமி**
**நிறுவன செயலாளர்**

**தேதி : அக்டோபர் 20 , 2017**
**இடம்: சென்னை**

Size: 8(w) x 30(h)cm